ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 ‖ காஞ்சிபுரம் 2—1—44 சுபானு மார்கழி 18—ஞாயிறு ‖ இதழ் 42.

## நிருபரின் நிலைமை.

—பாதன்.—

“கூட்டம் அதிகமோ?” என்று கேட்டார் ஆசிரியர், தமதுசுழல்நாற்காலியிலே அமர்ந்துகொண்டு.

“ஆமாம், செயின்ட் மேரிமண்டபம், நிறம்பிவழிந்து, வெளித்தாழ்வாரத்திலே ஓடி, தெருவிலே, வெள்ளம்போல் கூட்டமாக, ஜனங்கள். இந்திஎதிர்ப்புக்காரர்கள் போடுவார்களே கூட்டம், அதுபோல இருந்தது” என்று பதிலுரைத்தார் நிருபர், அக்கரையுடன் தனது வேலையைச் செய்துமுடித்ததை ஆசிரியருக்குத் தெரிவிப்பதுடன், தனக்குச் செய்தியை வர்ணிக்கவும் திறமை உண்டு என்பதனை விளக்க. ஆசிரியர், சந்தோஷமடையவில்லை. “சுருக்கமாகப் பதில் சொல்வதென்றவழக்கமே உனக்கு இல்லை. கூட்டம் அதிகமா என்றுகேட்டால், எஸ், நோ, (Yes, No.) என்று ஒரே வார்த்தையிலே பதில் சொல்லாமல், நாவல் மாதிரி நீட்டினால், யார் கேட்டுக்கொண்டிருக்கமுடியும்.” என்று கண்டித்தார். முன்பெல்லாம் விரிவாக, விளக்கமாக, ஒருவிஷயத்தைக்கூட விடாமல், தெளிவாகச்சொல்லும்படி கண்டிப்பான கட்டளையிட்டஆசிரியர், இப்போது கோபிப்பதன் காரணம் நிருபருக்குத் தெரியவில்லை. காரணமில்லாக்கோபமாக இருந்தாலும் நிருபர் பொறுத்துக்கொள்ளத்தானேவேண்டும்! சம்பளமில்லாச் சேவகமல்லவே!!

“கூட்டத்திலே என்ன விசேஷம்” என்றுகேட்டார் ஆசிரியர். நிருபருக்கு என்ன சொல்வதென்றுதெரியவில்லை. எதைவிடுவது எதைச்சொல்வதென்று தெரியவில்லை. கூட்டமே ஒருவிசேஷமாகத்தான் இருந்தது. ஜனத்திரளோ விசேஷம். அலங்காரங்களோ விசேஷம். மேடைமீது தலைவர்கள் அமர்ந்திருந்த காட்சியோ விசேஷம். தேசிகரென்ன தேவசேனைஎன்ன, பாகவதரென்ன அவரை ஒரேஒரு பாட்டுப்பாடும்படி வற்புறுத்திய ரசிகக்கூட்டமென்ன, N. S. K. என்ன அவர்கூறிய “பொம்பளே, ஆம்பளே விவாதப் பாட்டென்ன”, மதுவிலக்குப் பிரசாரத்தையும் ஒரு மாலை மறந்து அங்கு வந்திருந்த மாஜிகனங்களென்ன, எல்லாமே விசேஷமாகத்தான் இருந்தது. இவ்வளவையும்கூறினால், ஆசிரியர் கேட்பாரோ, கோபிப்பாரோ என்ற அச்சத்தால் அந்த நிருபர், கூட்டத்திலே என்னவிசேஷம் என்றகேள்விக்கு, “ஒன்றுமில்லை” என்று பதில்கூறினார். “இடியட்! (Idiot) ஒரு விசேஷமும் இல்லை என்றுகூறுகிறாயே, இதைவந்து சொல்லத்தானா நீ அங்கே போனாய்? பத்துமணிக்குள், மொத்தவிஷயமும் விளக்கமாக, விரிவாக, எழுதி வீட்டிற்கு அனுப்பவேண்டும். பத்துமணி என்றால் நாளைக்காலையில் அல்ல,' இன்று இரவு. நான் ஒரு பார்ட்டிக்குப் போகிறேன், பத்தடிப்பதற்குள் பங்களாவுக்கு வந்துவிடுவேன்” என்று கோபமாகப் பேசிவிட்டு, ஆசிரியர் தமிழாம்! இசையாம்!' என்றுமுணமுணத்துக்கொண்டே மாடிப்படிக்கட்டை இரண்டு மூன்றாகத் தாண்டிக் கீழே இறங்கி, மோட்டாரின் கதவை இழுத்து அடித்தார், நிருபரின் மீது இருந்த கோபம் தீரவோ, இத்தனை ஜனங்களுக்கு வேறுவேலையில்லையா, ஏன் இப்படிஇந்தத்தமிழ்இசை மாநாட்டுக்குப் போய்த்தொலைக்கிறார்கள் என்றகோபத்தை அடக்க முடியாமலோ! மோட்டார் மறைந்ததும், நிருபர் தலையைச் சொரிந்தார்-எதை எழுதுவது என்ற கவலையால்.

நிருபர்படும்பாடு! ஆசிரியர்களின் ஆணவம்! பத்திரிகைத் தொழிலும் சுயமரியாதையும்! என்ற ஏதாவதொரு தலைப்பிலே, ஒரு புத்தகமே எழுதியிருக்க முடியும் அந்த நிருபரால். அன்றிரவு அவர்மனதிலே, அவ்வளவு எண்ணங்கள் தோன்றின. ஆனால் ஆசிரியர் எழுதி முடிக்கச் சொன்னது, தமிழிசை மாநாடுபற்றிய தகவல். ஆசிரியர் மீதிருந்த கோபத்தை, நிருபர், வீட்டிலே, அம்மையார்மீது பிரயோகிக்கத் தொடங்கினார். ஆனால், அவருடைய மகன், தெருத்திண்ணையிலே உட்கார்ந்துகொண்டு, “ஆம்பளைக்கிடோ, வேட்டிகட்டிய ஆம்பளைக்கிடோ” என்ற N.S.K. பாட்டைப் பாடிக்கொண்டிருந்தான், அவன் தமிழிசை மாநாட்டுக்குப் போய்வந்ததால். நிருபர், கோபத்தையும் கவலையையும் மறந்து சிரித்தார். சிரிப்போடு சிரிப்பாக அவருக்கு ஒரு சிந்தனையும் பிறந்தது. அவசரஅவசரமாகக் குறிப்புப்புத்தகத்தைத் திறந்து பார்த்தார், “நான்பாடியது உங்களுக்கெல்லாம் புரிந்தது, தமிழிலே பாடினதால். உங்களுக்குப்புரியவே நீங்கள் சந்தோஷமடைகிறீர்கள். இதனால்தான் தமிழிலே பாடினால் தமிழனுக்குத்தெரியும், புரியும், என்றுதமிழிசை இயக்கம்கூறுகிறது”என்றுகாணப்பட்டது குறிப்பிலே. அது அன்றுதோழர் N. S. கிருஷ்ணன் செய்தசொற்பொழிவிலே ஒருபகுதி. நிருபர்,சாப்பாட்டுக்குப் பிறகு, எழுத ஆரம்பித்தார், ஒருமணிநேரத்திலே முடித்தார். பத்துமணிக்குப் பங்களாசென்றார், எடிடரைப் பார்க்க. முடியாது என்றுரைத்த பியூனிடம் ஒரு சினிமாகாம்ப்ளிமெண்டரி டிக்கட்டை வீசினார்,உள்ளேசென்றார்உரத்தகுரலிலே குரைத்தநாயைக்கண்டுநடுங்கினார், ஜிம்மி, ஜிம்மி என்று அதன்பெயரை ஜெபித்து அதன் உக்கிரத்தை அடக்கினார், யாரது? என்ற ஆசிரியர்குரலுக்கு “நான்தான்” என்று சம்பிரதாயமான பதிலுரைத்தார். காகிதக்கட்டைக் கொடுத்தார், கனைத்தார், எடிட்டரின்கரம் பேசியது கண்டு, பங்களாவைவிட்டு வெளியே கிளம்பினார், வீடுசென்றார், எதிர்வீட்டிலே, பாகவதரின் “உன்னைக்கண்டுமயங்காத பேர்களுண்டோ” பிளேட் பிரம்மானந்தமாக நடப்பது கேட்டது, வீட்டிற்குள்ளே சென்றார்.

சென்னை 23—12—43

(23—12—43 வியாழக்கிழமை) இன்று மாலை 4-30 மணிக்குச் சென்னை, செயின்ட் மேரி மண்டபத்திலே, தமிழிசை மாநாடு மிகவிமரிசையாக நடைபெற்றது. விமானப்படையெடுப்புச்சங்கு ஊதினால், மக்கள் பயந்து, A. R. P. பதுங்குமிடங்களுக்கு, ஒருவரை ஒருவர் நெட்டித்தள்ளிக்கொண்டு. நான் முந்தி நீமுந்தி என்று ஓடுவதுபோல ஏராள

(2ம் பக்கம் பார்க்க)

## நிருபரின் நிலைமை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான ஜனங்கள், மண்டபத்தை நோக்கி விரைந்தனர். மண்டபத்திலே எள்விழ இடமில்லை. மேடைமீதிருந்த தலைவர்கள் இருபதுக்குமேல்இருக்குமென்றால்அன்று மாநாட்டுக்கு வந்திருந்த ஜனத்திரளும் இருபது தனித்தனி மாபெருங்கூட்டங்கள் போடக்கூடிய அளவு இருக்கும்! அவ்வளவு பிரமாதமான கூட்டம்! சைனு பஜார் வீதிவரையிலும் கூட்டம்! காணமுடியாவிட்டாலும், பேச்சைக் கேட்கலாம், என்று அவ்வளவுகூட்டம் வீதியிலே நின்றது, ஒலிபெருக்கி, அவர்களுடைய சிரமத்தை உணர்ந்து, வேலைசெய்ததுபோல, தெளிவாக இருந்தது! இரைச்சல் குடைச்சலின்றி.

சர். R. K. சண்முகம், திரு. வி. கலியாணசுந்தரனார், C. R, டாக்டர் சுப்பராயன், குமாரராஜா V. V. இராமசாமி கோவை பழனிச்சாமி நாயுடுகார், சர். வெங்கடசுப்பராவ் தம்பதிகள், T. P. மீனாட்சிசுந்தரனார், S. முத்தையா முதலியார், அப்துல் அமீத்கான், C. தாதலிங்கமுதலியார், கச்சாபகேசமுதலியார் இந்திராணி பாலசுப்பிரமணியம், மீனாம்பாள் சிவராஜ், கல்கி ஆசிரியர், குமரன் ஆசிரியர் முருகப்பா, மற்றும்பலர் மேடையில் காணப்பட்டனர். மாகாணத்தின் பல பாகங்களிலுமிருந்து அனேக கலா ரசிகர்கள், மண்டபத்திலே குழுமியிருந்தனர். முத்தமிழ்க்கலா வித்வாத்ன T. K. சண்முகம் அவர்களும், அவர்களின் M. S. B. S. சபைநடிகரும், தற்போது பூம்பாவை எனும் படத்திலே நடித்துவருபவருவமான இராமசாமியும் வந்திருந்தனர்.

இடிபட்டுக்கொண்டும் இரைச்சலால் காதுகுடைச்சல் பட்டுக்கொண்டுமிருந்த கஷ்டம் மக்களுக்குப்போக, ஒருவிருந்து, மாநாடுதுவக்குமுன்பேகிடைத்தது! தேசிகர் பாடினார்! தமிழில்! இனிமைத்தமிழ் மொழி எமது உயிர்க்கு வாய்த்த நல் அமுது, என்று கனகசுப்புரத்தினம் (பாரதிதாசன்)பாடினாரே,அதுபொய்யா! அன்று, தேசிகரின் பாடல் கேட்டோர், தமிழின் இனிமையில் தம்மைமறந்தனர். தேசிகருங்கூட, துக்கடாக்களுக்கு மட்டுமே உபயோகிக்கப்பட்டுவந்த தமிழ் இவ்வளவு மாபெருங்கூட்டத்தைத் தமிழிசைக்கு இழுத்துவந்ததை எண்ணிப் பூரித்துத்தம்மை மறந்து, தமிழைத் தழுவி, இசையைப் பொழிந்தார். மகாநாட்டிலே, நகைச்சுவை அரசர் N.S.K. பிறகு, ஆண்பெண் சமத்துவபோதனை செய்யப்போகிறார் என்பதைத் தெரிந்தோ என்னமோ, தேசிகர் பாடியதும், தேவசேனா அம்மையாரும், திருவனந்தபுரம் திருமதி ஒருவரும், பாடினர். இந்தஇசை வரவேற்பு; முடிந்ததும் மாநாடு ஆரம்பித்தது. முத்தமிழின்சுவையிலே மூழ்கி மகிழ்ந்துவரும், ராவ்சாகிப் P. சம்பந்த முதலியார் அவர்கள், தமது வரவேற்புரையிலே, தமிழிசையின் வரலாற்றினை எடுத்துரைத்தார். ராவ்சாகிப் வெறும் ரசிகரல்ல என்பது தமிழருக்குத் தெரியும். நாடக ஆசிரியர். நடிகர். தமிழகமெங்கும் அவரது நாடக நூற்கள்காணப்படும். அரசியல் சுழலிலே சேராதவர், ஆனால், காலவேகத்தை உணராதவரல்ல. கலாரசிகர், ஆனால் கற்காலத்துக்கலையே இக்காலத்துக்கும் ஏற்றது என்ற பிடிவாதக்காரரல்ல. எனவே அவருடைய கருத்துரைகள், வெறும் பேச்சாகா. நாம்எடுத்துக்கொண்டகாரியம் நல்லதாக இருப்பினும் நடக்கக்கூடியதா என்று தெரிந்து கொள்ளவே, பலரும் விரும்புவர். காரணம் ஒருசிலர்தவிர மற்றையோர், நடக்கக்கூடியதுதான் என்ற நம்பிக்கைபிறந்தாலன்றி, ஒருகாரியத்திலே பிரவேசிக்க மாட்டார்கள். அவர்களுக்கு, வரவேற்புக் கழகத்தலைவர் இம்மொழிகூறினார். "50 வருடங்களுக்கு முன் **தமிழிசையானது எந்த நிலையிலிருந்தது? தற்காலம் எந்த நிலைமையிலிருக்கிறது? என்கிற விஷயத்தைப்பற்றிச் சிறிதுநேரம் ஆராய்ந்து பார்த்த அளவிலேயே, தற்காலம் அதற்கு நற்காலம் வாய்ந்திருக்கிறது என்று கூறிவிடுவார்கள்"** ராவ்பகதூர் அவர்கள், தமிழிசைக் கச்சேரி, தமிழ்க் காலட்சேபம், தேவாரபாராயணம், தமிழ் நாடகமேடை, படக்காட்சி, எனும் நான்குகதுறைகளிலே தமிழிசைபரவிவருவதையும் குறிப்பிட்டு, தமிழ்நாடகமேடைகளிலே தெலுங்கிலேபாடும் போக்கையும் வருத்தத்தோடு கண்டித்தார். தமிழிசை அவசியம், அது அவசியம் என்ற கருத்துபரவிவிட்டது, ஆக்க வேலைகளும் நடைபெறுகின்றன, என்ற நற்செய்தியைக்கூறி, மாநாட்டினரை அவர்வரவேற்றார். மாநாட்டைத் துவக்கியவர், செட்டிநாட்டரசர். மாநாடுமட்டுமென்ன தமிழ்இசை இயக்கத்தையுங்கூடத் துவக்கியவர் ராஜாசர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தானே! அவர் எண்ணித் துணிககருமம், என்பதறிந்தவர், எடுத்த காரியம் வெற்றிபெற வழிவகை தெரிந்தவர்.தமிழிசைஇயக்கத்திலேஅவருக்குள்ள ஆர்வம், தமிழரின் மறுமலர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கிறது.

தமிழ் இசை கேட்கவேண்டும், அதிலுள்ள இன்பத்தைப் பெறவேண்டும், என்ற ஒரே நோக்கம், செட்டிநாட்டரசருக்கு இருக்குமானால், அதைப்பெற, மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் தேவையில்லை, மனதிலே வேறு ஏதோமாச்சரியத்தை வைத்திருக்கும் பேர்வழிகளின் மனத்தாங்கலை அவர்மனமுவந்து ஏற்றுக்கொள்ளவுந் தேவையில்லை. தேசிகரையும் பாகவதரையும் துணைக்கு வைத்துக்கொண்டால், ராஜா. சர், சதாசர்வகாலமும் தமிழிசையைக் கேட்டு இன்புற்றபடி இருக்கமுடியும். ஏன்? தமிழிசையை யாரோ சில சங்கீதாத்னகாரங்கள்எதிர்ப்பதாகக் கூறுகிறார்களே, அவர்களுக்கே கூட ஐம்பது என்பதை நூறாகப் போட்டால், அருமையான தமிழ்ப் பாடல்களைப்பாடி அவரை அகமகிழச்செய்ய முன்வரமாட்டார்களா! ராஜா. சர். அவர்கள், தாம்மட்டுமே, தமிழிசையைக் கேட்டு இன்புறவேண்டும் என்று நினைக்கவில்லை. **தமிழர் தமிழிசையைக் கேட்க வேண்டும் என்ற பொதுநோக்கம் கொண்டிருக்கிறார்**, ஆகவேதான், தமிழிசை இயக்கம் கண்டார். ராஜா சர் அவர்கள் தமது சொற்பொழிவிலே கூறியுள்ளபடி, "தமிழ் உணர்ச்சியுள்ள எல்லாத் தமிழரும் இதன் கலைத்தொண்டில் பங்கு கொள்ளுவது கடமையும் உரிமையுமாகும்" அத்தக் கடமையைச் செய்யாதிருப்பது மடைமை! ஆனால், கடமையைச் செய்யாதிருப்பதுடன், கடமையைச் செய்பவரை எதிர்ப்பவர்களின் செயலை என்னென்பது! அது கேவலம் கொடுமை. அத்தகைய பிறவிகள் தமிழகத்திலே இருத்தல் முறையல்ல, என்பதனால்தான் **"தமிழகத்திலே தமிழ் முழக்கம் செய்வதைத் தடைசெய்யும் தமிழன் இருக்கமுடியாது"** என்று ராஜாசர் கூறினார். இருக்கமுடியாது என்ற அவர் உரையிலே தொக்கியுள்ள கருத்து, இருக்கக்கூடாது, என்பதாகும். "இதென்னய்யா புதிதாக ஒரு இயக்கம்; தமிழாம் இசையாம், இதெல்லாம் என்ன தொல்லை?" என்றுகேட்கும் பேர்வழிகளும் தமிழகத்திலே உண்டல்லவா! இதனை உணர்ந்தே, கொடைவள்ளல், **"தமிழிசை புதிதல்ல, தமிழிசை இயக்கம் படை எடுப்புமல்ல, அபசாரமுமாகாது-தமிழ் இந்நாட்டிற்குரிய மொழி. தமிழ்இசை இந்நாட்டுக்குரிய இசைச் செல்வம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழிசை செழித்து வந்தது"** என்று கனிவுடன் கூறினார். இக்கருத்தினையே, மாநாட்டுக்குச் செய்தியனுப்பிய, ஸ்ரீ டைகர் வரதாச்சாரியார், "தமிழ்ப்பண் 1991 என்று கணக்கிட்டிருக்கின்றனர்." என்று விளக்கியுமுள்ளார். புதிதல்லாததும், படைஎடுப்பல்லாததும், பண்டைப் பண்பை மீண்டும் பொலிவுறச்செய்யும் மாண்புடையதுமான தமிழிசை இயக்கத்தையும் சிலர் எதிர்க்கின்றனரே, என்ற கோபம், திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம், அவர்களை, **"இசையாளர் தமிழ் நாட்டில் தமிழிலேயே பாடவேண்டும், இல்லையேல் தக்கபாடம் கற்பிக்கப்படும் என்று எச்சரிக்கிறேன்."** என்று கூறச் செய்தது. ராஜாசர் அவர்களின் தெளிவான, கனிவான சொற்பொழிவுக்குப் பிறகும் தமிழிசையை எவரேனும் எதிர்ப்பதானால், அதனைக் கல்கி பத்திரிகையாசிரியர் தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறியபடி, "அந்தஅபஸ்வரப்பல்லவியை 1944ம் ஆண்டிலிருந்து யாரும் பாடமாட்டார்கள்" என்று கூறத்தான்வேண்

(3-ம் பக்கம் பார்க்க.)

## நிருபரின் நிலைமை.

2-ம் பக்கத்தொடர்ச்சி.

டும். சங்கீதத்திற்கு மொழிமுக்யமில்லை என்று கூறினாராம் ஒருசுப்பராவ்! அவரைப்பற்றி ராஜாசர். "சுப்பராவ் அவர்களும் கட்சிவேகத்தால் சிறிது மயக்கம் அடைந்து, கோணலான ஒரு அளவுகோலால் சங்கீதத்தை அளந்த தின்பயனாக, அழகிழந்து அனுகுணமான விஷயம் அவர் கண்ணிழந்து அவலட்சணமாகப்படுகிறது" என்றுகூறினார். காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள், என்ற பழமொழி, எவ்வளவு நாசுக்காக மலர்ந்திருக்கிறது பாருங்கள். தமிழிசை இயக்கம் தோன்ற வேண்டியகாரணத்தையும் ராஜாசர், தெளிவுபடுத்தினார். "பிறமொழிப் பாடல்கள் மிக்கசமீபத்திலேதான் தோன்றின. பிறமொழிப் பாடல்களில் மோகம்கொண்ட சிலர் தடைச்சுவர் எழுப்பினார்கள்." இந்தத் தடைநில்லாது என்பதறிந்தே செட்டிநாட்டரசர், இயற்கைக்கு விரோதமான இத்தடை எத்தனைநாள் நிற்கமுடியும்? தாயிடமிருந்து மக்களை எத்தனைநாள் பிரித்துவைக்க முடியும்" என்று கேட்பதன்மூலம், தடை நிலைக்காது, தகர்ந்து போய்விடும் என்பதைத் தமிழகத்துக்குத் தெரிவிக்கிறார். தமிழிசைக்கு ஆதாரங்கள் பலகூறியபிறகு, எதிர்ப்பாளருக்கு இவைகளை எல்லாம் சரியாகக் கவனித்து ஆர அமர யோசிக்க நேரங்கிடைக்குமோ கிடைக்காதோ, ஆத்திரக்காரருக்கு அவசரம் அதிகமாயிற்றே என்று கருதிப்போலும், ராஜாசர், அவர்களுக்குச் சுலபமான வழியொன்றையும்காட்டுகிறார். கண்ணிருப்பவர் தமிழிசைக்குள்ள பொது ஜன ஆதரவைக் காணலாம். காதிருப்பவர் எத்திசையிலும் தமிழிசை கேட்டு இன்புறலாம்" என்று செட்டிநாட்டரசர் கூறியபோது, மக்கள் காட்டிய உற்சாகம், கொஞ்சமல்ல. ஆனால், கண்டும் கேட்டுங்கூட, மனமொன்று சொல்ல வாயொன்றுபேசச் சிலருக்கு வழக்கமுண்டு. அவர்களின் வாய்ப்பறை இசைமாநாட்டுக்குப் பிறகும் ஓயக்காணோம்.

தமிழ்இசைக்கு எதிரிடையாக இரைச்சலிடுபவர்களிடம், காரணங்காட்டி வாதிடவோ, மன்னிப்புக் கோரவோ, அவசியமில்லை, நான் நீதியைக் கேட்கும்போது, நிமிர்ந்து நின்று கேட்டிடின் குற்றமென்ன, என்ற கருத்து, அன்று கோவைக்குமரன், சர். சண்முகம் அவர்கட்கு. 'தமிழ், இசைக்கு ஏற்றமொழியோ என்னவோ, அதிலே அருமையான கிருதிகள் உண்டோ இல்லையோ, தமிழ் இசை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இருந்ததோ இல்லையோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது, தெரியவேண்டிய அக்கரையுமில்லை. என்னுடைய தமிழிலே இருக்கும் அளவுஇசை எனக்குப்போதும். எனக்கு என் தாய்மொழியாகிய தமிழிலே பாடல் கேட்டால்தான் ஆத்மதிருப்தி உண்டாகிறது. இதற்குக் காரணங்காட்டத் தேவையுமில்லை, மன்னிப்பு கேட்கவேண்டிய அவசியமுமில்லை,' என்று, சர். சண்முகம், கூறினதும், மண்டபம் ஆடிற்று, மக்களின் ஆனந்த ஆரவாரத்தால், தமிழரின் உள்ளத்தை அவர் அம்மொழிகளால் படமெடுத்துக் காட்டினார். தமிழன் தமிழிலே பாடச் சொல்வதற்கும் தடையா, எதிர்ப்பா? என்று, கொதிப்புக்கொள்ளாத தமிழனில்லை. தமிழனின் இன்றைய நிலைமை என்ன? கேளுங்கள் சர். சண்முகத்தின் பேச்சினை. "உத்தியோகம் வேண்டுமென்றால் ஆங்கிலம் படிக்கவேண்டும். கலியாணம் கருமாதிகளுக்குச் சமஸ்கிருதம் வேண்டும். தேசபக்தன் என்ற பெயருக்கு இந்தி படிக்கவேண்டும். சங்கீதத்தை அனுபவிக்கத் தெலுங்குவேண்டும். தமிழ் எங்கே?" என்று அவர் சொல்லி முடித்ததும், மக்கள் கைதட்டியது, கேளாக்காதர்களுக்குக் கூடக் குடைச்சலைத் தந்திருக்கும். கேளாக்காதராக இருந்த அன்பர் ஆச்சாரியார், அருகேதான் இருந்தார். தமிழ் நிலைமையை, நகைச்சுவை ததும்ப, சர். சண்முகம் எடுத்துரைத்தார். "நேற்று நீங்கள் சொன்னமேடரைக் கன்சிடர் செய்தேன், என் ஐடியாவைக் கூறுகிறேன்" என்ற தமிழைத்தானே கேட்கிறோம். இந்த விசித்திர நிலைமைமாற வேண்டாமா என்று கேட்பார். சாப்பாடும் சங்கீதமும், அவரவர்களுடையதுதான், அவரவர்களுக்குப் பிடிக்கும் என்று அமெரிக்காவிலே, சீனநாட்டு அறிஞர் லின்யூடாங் என்பவர் கூறினார் என்று குறிப்பிட்டுவிட்டு, அமெரிக்காவிலே, அந்நாட்டு அருமையான உணவு வகைகளைத்தாம் உண்டகாலை, இட்லி சாம்பாரின்மீது தமக்கு நினைவு உண்டாயிற்று, என்று கூறினார். சர். சண்முகத்தின் சொற்பொழிவிலே, மற்றோர் விஷயம் விளக்கப்பட்டது. இந்த இயக்கத்திலே அரசியல் சூழ்ச்சி இல்லை. இருப்பதாகக்கொண்டாலும், என்னையும் சீமான் இராஜகோபாலாச்சாரியாரையும் ஒரே மேடையிலே கொண்டுவர இச்சூழ்ச்சி உதவிற்று என்றால், அது நல்லதுதான். இத்தகைய அரசியல் சூழ்ச்சிகள் இன்னும் அதிகமாக வேண்டும், என்று கூறிமுடித்தார். இத்தகைய அரசியல் சூழ்ச்சிகள் வேண்டுமா வேண்டாமா என்பதுபற்றிக் கருத்துவேறுபாடு இருக்கமுடியும், ஆனால், சர். சண்முகம் அன்று பேசியதுபோன்ற அழகிய, இனிமையான,தமிழ்ச் சொற்பொழிவுகள் அனேகம்வேண்டும், அடிக்கடி வேண்டும் என்பதிலேயாருக்கும் அபிப்பிராயபேதம் இருக்கமுடியாது.

பல நாட்கள் உபயோகிக்கப்பட்டு, தேய்ந்துபோன கிராமபோன் பிளேட்டுகளைக்கொண்டு "கானம்" கேட்டால் எப்படி இருக்கும்? கீதம் கிணற்றுக்குள்ளிருந்து கிளம்பும் குரல்போன்றிருக்கும், பேச்சுத் திறமை கெட்டுவிட்டாலும். திறமை கெடாதிருந்தும் மனதிலே கருத்து தீர்ந்துவிட்டாலும், கருத்து கெடாதிருந்தபோதிலும் மனதிற்பட்டதை மறைக்காமல் குறைக்காமல் கூற இஷ்டமில்லாவிட்டாலும், இருகட்சிகளுக்கும் புன்னகை காட்டவேண்டுமென்றாலும், அந்தப் பேச்சின்தரம், பழய கிராமபோன் பிளேட்டின் பாடலுக்குச் சமமாக இருக்கும். ஆச்சாரியாரின் பிரசங்கம் அன்று அப்படித்தான் இருந்தது. காரணம்யாதோ? எதையோ துவக்கி எதிலேயோ முடிப்பது. யாரையோ எண்ணிக்கொண்டு என்னவோ கூறுவது. ஒரு கருத்துரைப்பது, மறுகருத்தால் அதை வெட்டுவது, என்ற முறையிலே பேசலானார். இசைமொழியிலேகூற வேண்டுமானால், அவர் அன்று சுருதியிலே சேரவில்லை! சுருதியிலே சேராததுமட்டுமல்ல, பக்கமேளமும் கட்டிவரவில்லை. பேசத்தொடங்கும் போதே, பலர், போ! போ! என்று கூவினர். மாநாட்டு வரவேற்பாளர் ராவ்பகதூர் சம்பந்த முதலியார் தமது உரையிலே, வள்ளி கலியாண நாடகத்திலே வரும் சுப்ரமணியர் ஜெய ஜெய கோகுலபாலா என்ற தெலுங்குக் கிருதியைப் பாடுகிறாரே, இந்த ஆபாசம் அடுக்குமா என்றுகேட்டார். தமிழிசைமாநாட்டிலே, தமிழ் மொழிக்காகப் பரிந்து பேசியதற்காக ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழரைச் சிறைக்குள்தள்ளிய ஆச்சாரியார் பேசமுன்வந்தது, அதைவிட ஆபாசமாகப் பலருக்குத் தோன்றியிருக்கக்கூடும். குற்றம், கூவியவர்களுடையதாகாது. பேசவருபவரை உற்சாக மூட்டினால், மேளம்கட்டும். போ! போ! என்று கூவினால், பக்கமேளம் கட்டவில்லை என்றுதானே பொருள். ஆகவே பாடகருக்குப் பக்கமேளம் சரியில்லை, சுருதியில் சேராத சங்கீதமாக அன்று இருந்தது. வழக்கமான சில உருப்படிகளை வித்வான் பாடிவிடுகிற முறையிலே ஆச்சாரியாரும், அவருடைய காப்பிரைட்டான குட்டிக்கதை கூறினார். ஆனால் மொத்தத்திலே, ரொம்ப மட்டமானதரம்! அதிலும் சர். சண்முகத்தின் சுவையுள்ள பிரசங்கத்தைத் தொடர்ந்து இந்தச் சுருதியிலே சேராச்சங்கீதம் நடைபெற்றது, விகாரத்தை அதிகப்படுத்திவிட்டது.

"என்னைப்போல 100பேரை ராஜா சர். ஏமாற்றமுடியும், நானும் அவரைப்போல நூறுபேரை ஏமாற்றுவேன்" என்று கூறினார். ஏன் இப்பேச்சு? இத்தப்பேச்சுக்கான சம்பவம் ஏதேனும் அங்கு நிகழ்ந்ததா என்றால் ஒன்றையுங் காணோம். சிலவித்வான்கள் பாடும்போது உடலிலே சில சேஷ்டைகள் தங்களையுமறியாது ஏற்படும். பாடல்களிலேபாணி குறைந்தாலுங்கூட, சேஷ்டை குறையாது. அதைப்போல, இத்தகைய உரைகள் ஆச்சாரியாரின் பிரசங்கச்சேஷ்டைகள் என்று கொள்வதன்றி வேறென்ன சொல்லமுடியும்! ஏமாற்றுவதில் யார்

(5-ம் பக்கம் பார்க்க.)

திராவிட நாடு

காஞ்சி 2—1—44 ஞாயிறு

# ஆஸ்திரேலிய டானிக்!

காலிகூலா என்ற, ரோம்நாட்டு மன்னனுக்குக் குதிரையொன்றின்மீது, அளவிடமுடியாத பிரியமாம். அதற்கு அவன் காட்டிவந்த அக்கரையிலே, ஆயிரத்திலொருபாகம், தங்களிடம் காட்டினால் தரித்திரமே தலைகாட்டாதே என்று எண்ணித்தேம்புவராம் மக்கள். குதிரைக்கு, அரண்மனைபோன்ற கொட்டில்! மேய்ப்பும் தேய்ப்பும், அரசகுமாரனுக்கு அமைவதுபோல! உணவோ, விலையுயர்ந்தது! அந்தக்குதிரையைப் பராமரிக்க ஆட்களோ அனேகர். அதன்கனைப்புச்சத்தம் கேட்டதும் ஆள் ஓடி அருகே நின்று, என்குதிரை கனைத்தது என்று கண்டறிந்து, அதற்குப்பணிபுரியவேண்டுமாம்! ஒரு குதிரையிடம், காலிகூலாவுக்கு இவ்வளவு அன்பும் அக்கரையும் இருக்கிறதே, என்று மக்கள் ஆச்சரியப்பட்ட நேரத்திலே, மன்னனோ தனது அன்புக்கு இருப்பிடமான குதிரைக்குச் செய்துவந்த உபசாரம் போதாதென்று மனக்குறைகொண்டு, அக்குதிரையைத் தனது மந்திரியாக நியமிக்கவும் யோசித்தானாம்! நல்லவேளை, செய்துவிடவில்லை! இப்படியும் ஒரு மன்னன் இருந்திருக்க முடியுமா, என்று நினைப்பர் அன்பர். காரணத்தோடோ, காரணமின்றியோ, யாருக்கேனும்எவரிடமேனுமோ எந்தப் பொருளிடமேனுமோ பிரியம் ஏற்பட்டால், அந்தப் பிரியமே பித்தமாகும். அந்தப் பித்தத்திற்கேற்பச் செயல்புரியாது இருப்பார் சிலரே. பலரை அப்பித்தம் பிடரியைப்பிடித்துத் தள்ளும், உலகு அவர்களைக்கண்டு சிரிக்கும். எனவே காலிகூலாவுக்கு இப்படியொரு "அஸ்வத் தோழன்" இருந்திருப்பானோ என்ற சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. முக்கண்ணனுக்கு, முப்பத்திரண்டு பன்றிக்குட்டிகள்மீது உண்டான அன்பின் காரணமாக அவைகள் பாண்டியமன்னருக்கு மந்திரிகளாக அமர்த்தப்பட்டதுடன், மாஜிமந்திரிகளின் மனைவிமார்களுக்குக் கணவராகவும் நியமிக்கப்பட்டதாகத் திருவிளையாடற்புராணம் கூறுகிறது. ஆண்டவனுக்கும், அவருடைய திருக்குமாரர்எனத் தம்மைக்கருதிக்கொள்ளும் அரசகுமாரருக்கும், பிரேமை பிறந்துவிட்டால், எதுவும்செய்வர்!

பிரிட்டிஷ் முதலமைச்சர்மிஸ்டர் சர்ச்சிலுக்கு ஆஸ்திரேலியாமீதேற்பட்டிருக்கும் அன்பு, காலிகூலாவுக்குக் குதிரைமீது பிறந்தஅன்புபோன்றதா,அரனுக்குஅந்தப் பன்றிகளிடம் பிறந்த அன்புபோன்றதா, என்ற ஆராய்ச்சியை, புதுமை மூலம் பழமையை நிலைக்கச்செய்ய வேண்டும் என்று கருதும்கூட்டத்தினருக்குவிட்டு விடுகிறோம். எக்காரணம்பற்றிய அன்பாகஇருப்பினுஞ்சரியே அந்த அன்பை எந்த உதாரணத்துடன் ஒப்பிட்டாலும் சரியே, முதலமைச்சர் சர்ச்சிலுக்கு ஆஸ்திரேலியர்மீது அன்பு உண்டானதை உலகுக்கு விளக்க, அவர் கையாண்டமுறை, பிரிட்டிஷ் ஆட்சித் திருவிளையாடல்களிலே ஒன்றாக இருப்பதுகாண மிக வருந்துகிறோம். அடிமைப் பட்டநாட்டிலே, அதிலும் உட்பூசலும், ஏகபோக மிராசுக்கோட்பாடும், எய்ப்பவனுக்கு இடமும் ஏற்பட்டுவிட்ட இடத்திலே, எதையும்செய்யலாம், என்பதன்றி முதலமைச்சர் செய்துள்ள காரியத்துக்கு நமக்கு வேறெந்தக் காரணமும் தெரியவில்லை. ஆஸ்திரேலியப் பிரமுகர் மிஸ்டர் கேசி என்பவரை வங்காளக் கவர்னராக நியமித்திருப்பதையே நாம் குறிப்பிடுகிறோம். கேசி, வங்கத்தின் விசுவாசியாகிவிடக்கூடும், இந்தியாவின் நேசியாகியோ வங்கப்பஞ்சத்தைபோக்க உபதேசம் அருளும் சுவிசேஷியாகவோ காட்சியளிக்கக்கூடும். அவரது, அனுபவம் அறிவு ஆற்றல், விலைகொடுத்துப்பெறமுடியாதமணிகளாக இருக்கக்கூடும். ஆனால், அவரை, எந்த நியாயத்தின்படி இங்கு இறக்குமதிசெய்கிறார் முதலமைச்சர்,இலண்டன் மார்க்கட்டிலே சாக்குஇல்லை என்றா, இந்திய உபகண்டத்திலே, இதற்கு ஏற்றஆள் இல்லை என்றா, இந்திய கலாச்சாரத்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் ஆதிநாட்கள் முதல் ஏதேனும் தொடர்பு இருக்கிறதென்று ஆராய்ச்சி நடத்தியதினாலா, எந்தக்காரணம், இந்தக் காரியத்துக்கு முதலமைச்சர் கொண்டார், என்று அறிய நாம் ஆவல் கொள்வது தவறல்லவே! மிஸ்டர்கேசி வங்கக்கவர்னராக நியமிக்கப்பட்டார்என்ற செய்திவெளிவந்ததும், பிரிட்டிஷார், யுத்தகாலத்திலே நிபுணர்களை எங்கெங்கு உள்ளனர் என்று தேடிப் பிடித்து வேலைக்கு அமர்த்துவதும், விதவிதமான ஆயுதங்களை இரவல்பெறுவதுமாக இருப்பதுபோல, ஆஸ்திரேலியப் பிரமுகர் மிஸ்டர் கேசியை, யுத்தகாலச் சரக்காகக் கொள்ளுகிறார் போலும் என்று நம்பினோம், ஓரளவு மனச்சாந்தியும் வருவித்துக்கொண்டோம். இத்தாலியருக்கும் ஜெர்மானியருக்கும், வெள்ளையர் எவருக்கும் இங்கு இடமுண்டு, ஆனால் இந்தியாவெனும் பூபாகத்திலிருந்து இங்கு எவரும்வந்து தங்கலாகாது என்ற இறுமாப்பும் நிறத்துவேஷமும், இனஆணவமும்கொண்ட ஆஸ்திரேலியா, வங்கத்தை ஆளஒரு தங்கக்குணம் படைத்தவரை அனுப்பினாலும், தன்மானம் தலைமீது குட்டப்பட்டது என்றே இந்த உபகண்டத்திலுள்ளோர் கருதுவர். ஆனால் இதுபோர்க்கால ஏற்பாடுகளிலே ஒன்று, பதுங்குமிடமும் ஊளையிடும் சங்கும், அளவு அரிசியும் அங்காடியில் கெடுபிடியும் இருப்பதுபோல இதுவும்ஒன்று,என்று எண்ணினோம், புண்ஆறும் என்று நம்பினோம்.

ஆனால்,நமது நம்பிக்கையை மிஸ்டர் கேசி தகர்க்கும் முறையிலே பேசியுள்ளார். வங்கக் கவர்னர்பதவி தனக்கு வழங்கப்பட்டதற்குக்காரணம், தன்பிரத்யேகத் திறமை என்றுஅவர்கூறியிருக்கலாம்-தற்பெருமை சிரித்து மன்னித்துவிடவேண்டிய குற்றந்தான். முதலமைச்சர் என்னிடம் கொண்டுள்ள அன்பினால் இப்பதவி பெற்றேன் என்றுரைத்திருக்கலாம்-நேசத்தின் விளைவு பலப்பல என்று நாம் கருதிவிடலாம். கிழக்கிந்தியக் கம்பெனி துவக்கப்பட்டபோது, எனது முப்பாட்டனார், அது வெற்றிகரமாக நடக்குமென்று கூறினார், ஆகவே மூன்று தலைமுறைகளாக எங்கள் குடும்பத்திற்கும் இந்தியாவுக்கும் தொடர்பு உண்டு என்று கூறியிருக்கலாம், கவர்னருக்கு வரலாற்று அறிவு அதிகம் என்று வகையற்றவர் கூறிவிடுவர். ஆனால் மிஸ்டர் கேசி, மறைக்கவில்லை உண்மையை. பதவி, ஆஸ்திரேலியரைக் குஷிப்படுத்தவேதரப்பட்டிருக்கிறது என்று கூறத்தயங்கவில்லை. "ஆஸ்திரேலியர்களுக்கு அன்னியநாடுகளிலே இன்னம் அதிகமான, முக்கியமான பதவிகள் அளிக்கப்படவேண்டியது அவசியம். இதுபற்றி நான் முதலமைச்சருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறேன்" என்று, மிஸ்டர் கேசி, கெய்ரோவிலே ஒரு பிரிட்டிஷ் பத்திரிகைக்காரருக்குக் கூறினார். இது தெளிவாகத் தெரிவிக்கிறது, ஆஸ்திரேலியருக்குத் "தானம்" தர, தருமகுண சீலர்களான ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் தயாராக உள்ளனர் என்பதை. இதுசரியா என்று கேட்கிறோம்? ஆஸ்திரேலியாவை அகமகிழச் செய்ய, இந்திய பூபாகத்தை அவமதிப்பதா என்று கேட்கிறோம். சூரியனே அஸ்தமிக்காத பரந்தபிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளே, யாரும்கேளிர் என்று முதலமைச்சர் கருதுகிறாரா, கருதுவதானால், இங்குள்ளவர் எவரையேனும் ஆஸ்திரேலியாவிலே கங்காரு கண்காட்சிச்சாலை மானேஜர் வேலைக்காவது நியமிப்பாரா, அவரது உத்தரவை ஆஸ்திரேலியர் ஏற்பரா என்று கேட்கிறோம். பெரிய மனிதர்களின் சிலசிறிய செயல்கள், அவர்கள் மேற்கொண்டுள்ள பெரியவேலையைக்கூடப் பாதிக்கும்என்பது, முதலமைச்சரின் நினைவிற்கு வாராதது, அவரது நிமோனியா என்று நாம் கருதவில்லை, அமெரிக்க சரிதத்தைப்படிக்க அவருக்கு அவகாசமில்லாததே அதற்குக்காரணம் என்று கருதுகிறோம். கேவலம், தேயிலைக்கு வரிபோட்டதன் விளைவுதான், அமெரிக்கச் சுதந்திரப் போராட்டத்திற்குக்காரணம். பணங்கட்ட முடியாததால் வந்தபகையல்ல, வரிவிதித்துச் சுயமரியாதையைச் சிதைத்ததால் வந்தவம்பு. இந்தியா, அமெரிக்காஅல்ல என்பதை நாமறிவோம், எனவே, ஏகாதிபத்யத்தின் திருவிளையாடல்களைத் திருப்பித்தாக்கும் சக்தி நமக்கு இல்லை என்பது, இங்குள்ளோருக்குத் தெரியும், என்றாலும் குமுறும் நெஞ்சம், ஆயுதத்தைவிடக் கொடி

யது என்பதைத் முதலமைச்சருக்கு நினை ஆட்டுகிறோம். ஆஸ்திரேலியரும் ஆப்பிரிக்கரும், மற்றவரும் வந்து ஆள்வதற்கு பிரிட்டன், இந்தியரவைப் பண்ணையாக் கவிரும்பும் போக்குக்கும், சிறுநாடுகளின் சுதந்திரத்தைப்பற்றிப் படிக்கும் சிந்துக்கும், பொருந்தவில்லையே! ஏகாதிபத்யத்தைக்கலைக்கவா நான் தலைமைபூண்டேன், என்று முதலமைச்சர் பேசியதற்கும், மிஸ்டர் கேசியை நியமித்ததற்கும் அழகான பொருத்தமிருக்கிறது, புளித்த கள்ளுக்கும் காரக்கருவாட்டுக்கும் பொருந்துமாமே, அதுபோல!!

ஆஸ்திரேலியராக இருப்பினும், நிபுணர் என்பதற்காகவே, மிஸ்டர் கேசியை மிகச்சிரமப்பட்டு, இங்குகொண்டு வந்தோம் என்று முதலமைச்சரின் முகாமு கூறக்கூடும். ஏகாதிபத்யச் சுருதிப்பெட்டிகள் வங்கத்திலே ஒரு தங்கம் என்று பாடவுங்கூடும், ஆனல் இதுஉண்மை என்று எந்த உன்மத்தனும் கருதமுடியாது. நிபுணர்கள் எந்த நாட்டவராக இருப்பினும் என்ன என்றுகூறும் பேச்சு நிலைக்காது. இங்குள்ள பாமரமக்களிடை சமதர்மஆர்வம்பிறக்கச் செய்யவும், தொழிலாளர் முன்னணி அமைக்கவும், அந்தத் துறையிலே எட்டு நெட்டுரு மட்டுமன்றி, உண்மை அனுபவம்பெற்ற, ஒருரஷ்யத் தலைவரை, இந்தியத் தொழிலாளர் நிர்வாகத்தலைவராக பிரிட்டிஷார் நியமிக்க முன்வருவார்களா என்று கேட்கிறோம். எங்கேபார்ப்போம், அவர்களின் வாதம், பரீட்சைக்கு நிற்கிறதா என்று. உண்மையிலே, கடைசி சூரணம்போல, சரியும் ஏகாதிபத்யத்துக்குச் சாம்ராஜ்யநாடுகளின் சக்தியை ஒட்டவைத்து, நிலைக்கச்செய்வோம், என்பதன்றி, இந்தப்போக்கிலே வேறு எதுவுங்காணேம். இது ஏகாதிபத்யத்தை உண்மையிலே நிலைக்கவும் செய்யாது.

காராச்சியிலே, மிகவிமரிசையாகக் கூடிய முஸ்லீம்லீக் மாநாட்டில், காயிதே அஃலம் ஜனுப்ஜின்னு, ஏகாதிபத்யம் நிர்ப்பந்தமாகக்கலைக்கப்படுவதைவிட, தானுகக்கலைத்துவிடுவது கண்ணியம், என்று மிஸ்டர் சர்ச்சிலுக்குக்கூறினர். ஜெர்மன் நகரைத்தாக்க 3000 விமானங்களை அனுப்பினேம் 26000 டன் எடையுள்ள ஜெர்மன் கப்பலை மூழ்கடித்தோம் என்ற பூரிப்பிலே இருக்கும் முதலமைச்சருக்கு, ஒட்டகவண்டியிலே ஏறிச்சென்ற ஜனுப் ஜின்னுவின் கண்டனம், மிகச் சாதாரணமானதாகத் தோன்றக்கூடும். ஆனல், பத்துக்கோடி முஸ்லீம்கள், பலலெபனுன்கள், பலசிரியாக்கள், பல பலஸ்தீன்கள், அந்தப்பேச்சின் பக்கபலம் என்பதைமறப்பது அறிவுடைமையாகாது. திராவிடஇனத்தின்சார்பிலே நாமும், இந்தப்பிரிட்டிஷ் போக்கைப்பலமாகக் கண்டிக்கிறோம். எந்தக் கட்சியையும்திருப்திசெய்துஆதரவுதேடப் பிரிட்டிஷார் விரும்பவில்லை என்று லீக் மாநாட்டிலே ஜனுப் ஜின்னு கூறினர்.

அதுமுற்றிலும் உண்மை. இந்தப் போக்கைச் சமீபத்திலே வைசிராய் பிரபுவின் பேச்சும் விளக்கிவிட்டது. ஆனல் இவ்வளவுக்கும் பரிகாரம் என்ன? இழிநிலையும் பழிச்சொல்லும் நீங்குவது எப்படி? டாக்டர் மூன்ஜே பேசினரே, இந்துமகாசபை மாநாட்டிலே, அதுபோல இந்தியா பூராவும் வேதகாலஆட்சிபெறவேண்டும்என்று கூறுவதா, பரிகாரம்? விக்ரம ஆட்சி வேண்டுமென்று முன்ஷி மொழிந்தார், நாம் கண்டித்தோம், ஜனுப் ஜின்னுவும் லீக்சொற்பொழிவிலே இதனைக்கண்டித்தார், அத்தகைய விக்ரமஆட்சிக்காகத்தவமிருப்பதாவழி? அல்லது மிதவாதிகள் தமது மாநாட்டிலே, பேசினர்களே, ஆகாகான் மாளிகைக் கதவைத்திறக்க வேண்டுமென்று, அதுவா வழி? இல்லை! நமக்குள் உள்ள மாறுபாடு ஒழிந்து, ஏகபோகப் பேராசைஒழிந்து, முஸ்லீமுக்குப் பாகிஸ்தான், இந்துவுக்கு வேதஸ்தான், திராவிடருக்குத்திராவிடநாடு, என்ற இன உரிமையை அடிப்படையாகக் கொண்ட முக்கூட்டுத்திட்டம் ஏற்படுவதே, முதுமைப்பருவத்திலே கிடக்கும் ஏகாதிபத்யத்துக்கு ஆஸ்திரேலியடானிக் கொடுத்தாவது, ஆடவைக்கவேண்டும் என்று கருதும். சர்ச்சில் சகாக்களுக்குச் சரியானபதிலாக இருப்பதோடு, சஞ்சலத்தைத்தீர்க்கும் வழியுமாகும். இதை இனியேனும், இந்து, காங்கிரஸ் தலைவர்கள் உணர்வார்களா?

## வரப்போகுதய்யே...!

மார்கழி மாதம் திருவாதிரைநாள் வரப்போகுதய்யே, என்று பாடினாரே நந்தன், அந்தநாள் வருகிறது. ஊர்பலவற்றிலே, உள்ளேகிடக்கும் உற்சவமூர்த்திகள், வெளிக்கிளம்புவர்! திருவாதிரை ஒருவாய்க்களி, என்றபேச்சும், திரும்பிப் பார்த்தால் உலக்கைத்தடி என்றவசலும், நடக்கும். அத்திருவிழாவிலே கலந்து கொள்பவர்கள், சேவைசெய்துவிட்டு, நெற்றியிலே அர்ச்சகர் அளிக்கும் திருச்சாந்தினை அணிந்துவீடுதிரும்புவர், மோட்சத்திற்கு அச்சாரம் தந்துவிட்டதாகக் கருதிக்கொண்டு. அந்த விழாவிலே, திலகமிடும் செயல்புரியும் சீலர்கட்கு, அதை ஒட்டியுள்ள புராணம் தெரியுமோ, என்பது சந்தேகந்தான். தெரிந்தால், தன்மானமுள்ளவன், இத்தகைய திருவிழாவிலேகலந்துகொள்ளவுமாட்டான் திலகமிட்டுக் கொள்ளவுமாட்டான். கேட்க ஆபாசமானது, அந்தத் திலகத்தின் திருக்கதை!

சிவனுக்கும் காளிக்கும், நர்த்தனம், நடந்ததாம் முன்பொருபோது. சளைக்காமல் சதிராடிய காளியை எப்படியேனும் தோற்கடிக்கவேண்டுமென்ற கருத்துடன் தோடுடைய செவியன், காலைத் தூக்கி நின்று ஆடினராம். ஒரு ஆடவன், பெண்ணின் எதிரே காலைத்தூக்கி நின்று ஆடினல், காட்சியின் கோரத்தையும், நிலைதக்காண நேரிடும் அம்மையின் தன்னிலும் கருத்திலுமுண்டாகும் மிரட்சியையும் விவரிக்க வேண்டுமா! அதிலும், அவர் எப்படி எப்படி ஆடுகிறரோ, அப்படியெல்லாம் அம்மையும் ஆடவேண்டும் என்பதே நர்த்தனப்போட்டியிலே முக்கியாம்சம்; என்ன செய்வாள்காளி? எப்படிக் காலைத்தூக்கி ஆடுவது? தோற்றுளாம். இந்தக்கேவலமான முறையில் கெலித்த கடவுள், களித்தாராம், இன்றும் பக்தர்கள் இதைத்தான், காலைத் தூக்கி நின்றாடிய தெய்வமே! என்று பாடிக் களிக்கின்றனர். புராணம் இத்துடன் முடிந்திருந்தால், திருவாதிரை திலகம் ஏற்பட்டிராது. மேற்கொண்டும் ஒன்றுநடந்தது, அதைவிட ஆபாசமானது. சிவனரின் நர்த்தனத்தின்போதும் ஜடையிலேயே இருந்தாளாம் கங்காதேவியார். திடீரெனச் சிவனரின் நெற்றியிலே, உதிரம் ஒழுகிற்றும். அவர்மேலே விழவுமில்லை, வேறுவகை காயமும் ஏற்படவில்லை. அவர் தெரிந்துகொண்டார், உதிர உற்பத்தியின் காரணத்தை, மேலேஇருந்த கங்கையும் சற்று வெட்கினர்கள், திடீரென மாதவிடாய் ஆனதால், உதிரம் சிவனருக்கு அபிஷேகிக்க வேண்டி நேரிட்டதற்காக. சிவனர், உதிரத்தையே திலகமாக்கிக்கொண்டார். அந்த உதிரத்தின் அறிகுறியாகத்தான் இன்றும் திருவாதிரையின்போது, பக்தர்கள், திருச்சாந்தை திருவிழாவிலேபெற்று, நெற்றியிலே தீட்டிக்கொள்கின்றனர். அறிவும் தன்மானமும் தமிழருக்குப் பிறந்தால், இனி இத்திருவாதிரைத் திலகத்தைத் தரிப்பாரு என்று கேட்கிறோம். வெட்கக்கேடு! வெட்கக்கேடு!! வேண்டாம் இந்த மானமற்றசெயல்!!

## திருப்பின் நிலைமை,

3-ம் பக்கத் தொடர்ச்சி.

திறலமசாலி என்ற போட்டிப்பந்தயமா நடக்கிறது, இவர் தமது திறமையைக் கூற!

தமிழிசையை எதிர்ப்பவர்களின் மனோபாவத்தை, தமிழிசையரசர்களுக்கு ஆச்சாரியார் அதிகசிரமப்பட்டு விளக்க ஆரம்பித்தார். தமிழிசையை எதிர்ப்பதிலிருந்தே அவர்களின் மனப்பான்மை தமிழருக்குத் தெரிகிறதே, அதை இவர் சிரமப்பட்டு விளக்குவானேன்? அவர்கள் அனுப்பிவைத்த தூதரா? என்றே மக்கள் யோசித்தனர். "இத்தனை காலமாகத் தெலுங்கே பாடிக்கொண்டிருந்தார்கள் வித்வான்கள். திடீரென்று அவர்களைத் தமிழிலே பாடும்படி வற்புறுத்தினுல் முடியுமா, கஷ்டம். வற்புறுத்தக் கூடாது" என்றுகூறினர். ஆஹா! என்ன அருமையான உபதேசம்! தமிழேபாவாத தமிழ்நாட்டிலே, இந்தியைக்கட்டாயபாடமாக்கவேண்டாமய்யாஎன்று கூறிய குற்றத்திற்காக ஆண்பெண் குழந்தைஅடங்கலையும் சிறைக்குள்தள்ளிய சீலர், செய்தருரே இந்த உபதேசம். நரியவஞ்சகம்

(6-ம் பக்கம் பார்க்க)

## நிருபரின் நிலைமை.

கூடாது என்று பேசுவதுபோல்! என்று மக்கள் நினைத்ததிலே தவறு என்ன? தமிழிசை இயக்கம் ஒற்றுமை இயக்கம்என்று ராஜாசர் கூறினார். இருவேறு அரசியல் கொள்கையினரை ஒன்றாக அமரச்செய்தது தமிழிசை இயக்கம் என்று சர். சண்முகம்கூறினார். ஆமாம், என்று சொன்னால், ஆச்சாரியாரின் பூர்வீகமா பறிபோகும். "அதெல்லாம் இல்லை! தம்பூரினால் ஒற்றுமை ஏற்படாது" என்று கூறிவிட்டார். தாரை தம்பட்டத்துடன் இந்தத் தாதர் தனியாகவே இருக்கட்டுமே, இங்கென்னவேலை இவருக்கு என்று மக்கள் எண்ணியதிலே தவறென்ன? அவருடைய சொற்பொழிவு எப்போதுமுடியும் என்று மக்கள் சலித்துக்கொண்டதிலேயும் தவறென்ன! இவ்விதமான தொல்லைதரும் பேச்சைவிடத்தலைவர் T.K. சிதம்பரநாத முதலியார் பேசினது போலக் கேட்போம், மறப்போம், என்ற அளவிலேமக்கள் கொள்ளக்கூடிய சிலபலபேசியிருந்தாலுங்கூடப் பாதகமில்லை. தலைமைபூண்டவர் "உலகத்திலே எங்குமில்லாத காட்சி ஒன்றைத் தமிழ் நாட்டிலே பார்க்கிறோம், போன போன இடங்களிலெல்லாம் கோயில்களும் கோபுரங்களும் எழுந்து நிற்கின்றன" என்று கூறினார். அதுபோலக் கோயில் கோபுரம், கோயில் மணியோசை கோபுரத்தின்மீது குதித்துக் கூத்தாடும் குரங்கு பரதநாட்டியத்தைப் பார்த்ததால் பயிற்சி அடைந்தபண்பாடு, முதலிய பல பொருளைப்பற்றிப் பேசியிருந்தாலுங்கூட, மக்கள் சலித்திருக்கமாட்டார்கள். ஏதோ பாவம் அவருக்கு இந்தக்காட்சிகளிடம் அபாரமான பிரியம் போலும்! நல்லமனுஷ்யர்! என்றுகூறிவிட்டு வேறுகாரியத்தைப் பார்ப்பர். ஆச்சாரியாரின் பேச்சோ அந்த ரகமாகவும் இல்லை.

தமிழிசை வரலாற்றைத் தலைவர் T. K. C. அவர்கள் குறிப்பாகக் கூறியபகுதியே அவரது சொற்பொழிவிலே மிக்க பயனுள்ளதாக இருந்தது. பிற, அவருடைய பிரியமான பண்பாடுடன் பிணைந்திருந்ததால் அவர் அளவுபண்பட்டாலன்றிப் பிறரால், அவற்றின் பொருள் என்னவென்று தெரிந்துகொள்ள இயலாது, அவர் அளவு பண்பட, வாழ்க்கையிலே நிம்மதி வேண்டும். அது பெரும்பாலாருக்கு ஏது! அதுவேறு விஷயம். பெரிது.

3 வருஷத்திற்கு முன்பு (16-11-40) கனம் செட்டிநாட்டரசர் சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தமிழிசைக்கென்று அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தாருக்குப் பதினாயிரம் ரூபாய் நன்கொடையைப்பட்டம் அளிப்பு விழாவில் வெளியிட்டபோது, அன்று ஒருபுதிய யுகத்தையே அந்தத்திருநாள் ஆரம்பித்துவிட்டது. அன்று முதல் நாடெங்கும் தமிழிசையுணர்ச்சி நாளுக்குநாள் அதிகமாகப்பரவி வந்திருக்கிறது" என்று T. K. C. கூறினார். மற்றும் புரொபசர் சாம்பமூர்த்தி, குமரன் ஆசிரியர் முருகப்பா, திருமதிகள் மீனாம்பாள், சிவராஜ், இந்திராணி அம்மையார் செங்கல்வராயன், அண்ணாத்துரை, ஆகிய பலரும் பேசினர். தமிழிசை மாநாட்டைத் தொடர்ந்து நடைபெறும் இசை விருந்தினைப்பற்றிய பேச்சுடன், மக்கள் நாளைக்குத் தேசிகர் பாட்டு, மறுநாள் பாகவதர், பிறகு ராஜரெத்தினம் நாயனமாம், ஜெயராமன் பாட்டு கேட்கவேண்டிய பாட்டாம், M. S. கூடவாமே, K. B. S. கூடத்தான் பாடவருகிறார்களாம், என்று இசைவிருந்தின் தன்மைபற்றிய பேச்சுடன் வீடு திரும்பினர். தமிழிசையை வளர்க்க அரும்பாடுபடும் செட்டி நாட்டரசரை வாழ்த்தாதார் இல்லை.

தமிழிசை மாநாட்டிலே, கண்டதையும் அதனால் மனதிலே கொண்டதையும் மேற்கூறியபடி, நிருபர், கஷ்டப்பட்டு எழுதிக் கொடுத்தாரேதவிர, ஆசிரியருக்குக் கொஞ்சமும் இதுபிடிக்கவில்லை. தமிழிசை இயக்கத்தை ஆதரிக்கக்கூடாது என்று தீர்மானித்திருந்த எடிடருக்கு, ஏற்றபடி, நிருபர், செய்தியைச் சித்தரிக்காதது, கண்டிக்கத்தக்கது, முதலாளித்தனத்தைஅடிப்படையாகக் கொண்ட பத்திரிகாலயத் தர்மப்படி! எனவே மறுதினம், எடிடருக்கும் நிருபருக்கும் வாக்குவாதம் ஆரம்பமாயிற்று.

"தமிழிசை மாநாட்டு ரிபோர்ட் யார் எழுதியது?"

"நான்தான்."

"இல்லை."

'சார், என்கைஎழுத்துக்கூடவாதெரியவில்லை. நான்தான் சார், எழுதினேன்.'

"எழுத்து உன்னுடையதாக இருக்கலாம், எண்ணம் வேறயாருடையதோ, உன்னுடையதல்ல."

"இதென்ன சார், எனக்குத் தோன்றியதை எழுதினேன்."

"இடியட்! (Idiot) நீ, அந்தப் பிரசங்கங்களைக் கேட்டு, அதே மோகத்திலே இப்படி எழுதிவிட்டாய். நம்மபத்திரிகையின் பாலிசி (Policy) தெரியுமல்லவா? அதற்கேற்றபடி எழுதவேண்டாமா?"

"பாலிசியா? அது தெரியுமே எனக்கு. இந்த நான்-பிராமன் (Non-Brahmin) கூட்டத்தைக் கண்டிக்கவேண்டும். அதுதான் நம்மபாலிசி-தெரியுமே."

"தெரிந்துமா இப்படி எழுதினாய்?"

"இது நான்-பிராமன் பார்ட்டி இல்லையே. நம்மராஜாஜி கூடத்தானே இருந்தார்."

"ராஜாஜி அங்கு இருப்பார். நாம் இந்தத் தமிழிசையை எதிர்த்துத்தான் வருவோம் பிராமன்ஸ் எல்லாம் தமிழிசையை எதிர்க்கிறான் என்ற பழிச்சொல்வராமே இருக்கத்தான் ராஜாஜி அங்கு இருக்கிறார், தெரியுமோ. இந்தத் தமிழ் இசைக்கு ஆரம்பத்திலேயே பிரேக் (Break) போடாவிட்டா, பாஷையை மாத்ரதோடு இல்லாமே, கருத்துஇருக்கே அதையும் மாத்தி, சங்கீதத்தையே, மதத்திற்கு உதவாதபடி செய்தூடுவா. ஆகவே அவசியம் இதைக்கண்டிக்கணும். நான் எடிடோரியல் எழுதப்போறேன் இதைக் கண்டிச்சி. நீஇந்த ரிபோர்ட்டை எடுத்துண்டுபோய், நான் எழுதப்போற எடிடோரியலுக்குத் தக்கபடி திருத்தி எழுதிண்டு சுருக்காவா, ரொம்பஷார்ட்டா இருந்தாபோதும். ராஜா சர். பிரசங்கம் கால்கலம், ராஜாஜி பிரசங்கம் முக்கால் அல்லது ஒரு கலம் இருக்லலாம், மற்றவாபேச்செல்லாம், Mr. So and so also spokeலே சேர்த்தூடு. போ"

ரிபோர்ட்டர், எடிடரின் கட்டளைப்படி, தமிழிசை மாநாட்டு நிகழ்ச்சியை மாற்றி எழுதிக்கொடுத்தார், அதுவே, பத்திரிகையிலே வெளிவந்தது. எடிடர், இசையிலுமா வகுப்பு வாதம்? சங்கீதத்தைத் கெடுக்கலாமா? என்ற கேள்விகளும், கர்நாடக சங்கீதத்துக்கே அழிவு காலம் என்றுதான் நினைக்கவேண்டி இருக்கிறது என்ற பீதியுரைகளும் கொண்ட, லீடர்எழுதினார். வாசகர்களுக்கு, உண்மை நிகழ்ச்சியும், நிருபரின் நினைப்பும் ,அவர்முதலிலேஎழுதிய நீண்ட உண்மைசெய்தித்தொகுப்பும் தெரியாது!

இந்து, மித்திரன், பாரததேவி, முதலியன தமிழிசையைத் தாக்குகின்றன. இவைகளிலே எந்தப் பத்திரிகாலயத்திலே, இந்த ரிபோர்ட்டர் எடிடர் சம்வாதமும், உண்மை சம்ஹாரமும்,பொய்யும் புனைசுருட்டு ஜனனமும், நடைபெற்றது, என்று கேட்கவும் விடையைத் தெரிந்து கொள்ளவும்தோழர்களுக்கு ஆசை இருக்கும். ஆனால், ஒரே ஒரு ஊரிலே, ஒருபத்திரிகை, அதன் எடிடருக்கும் ரிபோர்ட்டருக்கும், நான்மேலே தீட்டியபடி சம்வாதம் நடந்தது என்று கூறுவதைத் தவிர, நான் மேற்கொண்டு எதுவும்கூறமுடியாது. அந்த ரிபோர்ட்டர், முதலிலே தயாரித்த செய்திச்சித்திரத்தை என்னிடம் கொடுத்து, தனக்கும் ஆசிரியருக்கும் நடந்தசச்சரவையும்கூறிப், புதிதாக ஒரு புளுகு ரிபோர்ட் தயாரித்ததையும் வருத்தத்தோடு என்னிடம் தெரிவித்ததோடு, என்பெயரைமட்டும் வெளியேகூறிவிடாதே வேலை போய்விடும், என்று கேட்டுக்கொண்டார். உண்மையிலேயே வேலை அவருக்குப் போய்விட்டால், அவரை ஆதரிக்கத் தமிழரிடம் தினசரியாவது உண்டா? இல்லை! யார் அந்த ரிபோர்ட்டர் என்று அறிய ஆவல்கொள்வதைவிட, இவ்வளவும் என் கற்பனை என்றேகருதிவிடுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒன்றுமட்டும் உறுதி. எந்தப்பத்திரிகை, தமிழிசை மாநாட்டைப்பற்றிய உண்மைச் செய்தியை வெளியிடவேண்டுமானாலும், நான்குறிப்பிட்ட நிருபரின் செய்திச் சித்திரத்தைப் போன்றதாகத்தான் இருக்கமுடியும். ஆனால் தமிழருக்கு ஒரு தினசரி இல்லாததால், 'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அரிது" ஆகிவிட்டது!!

# போலி நிர்வாகக்கமிட்டி கூட்டம், சாதாரணக்கூட்டமாக மாறிற்று.

★

தோழர்கள். சர். பாத்ரோ. K. C. சுப்ரமண்யம் செட்டியார் M. தாமோதரம் நாயுடு, P. பாலசுப்ரமண்யம், T. சுந்தரராவ் நாயுடு, திவான் பகதூர் இராமன் ஆகியமற்றும் சிலரால், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் என்ற பெயரால் அழைப்பிக்கப்பட்டிருந்த கூட்டம் 27–12–43 காலை 10-½ மணிக்குச் சென்னை தேனாம்பேட்டை சன் தியேட்டரில் கூடிற்று. கூட்டத்தின் ஆர்கனைசர், வேண்டுமென்றே சிலருக்கு அழைப்பு அனுப்பாதிருந்தும், சில நிர்வாக உறுப்பினர்கள் வந்திருந்தனர். அழைப்பில் கையெழுத்துப் போட்டவர்களில் சிலர் என்ன காரணத்தாலோ கூட்டத்திற்கு வரவில்லை.

இக்கூட்டத்திற்கு வந்திருந்த நிர்வாக உறுப்பினர்கள் பின்கண்ட 18 பேரும். தோழர்கள். சர். பாத்ரோ, K. C. சுப்ரமண்யம் செட்டியார் M. தாமோதரம் நாயுடு, P. பாலசுப்ரமண்யம், திவான் பகதூர் இராமன், C. L. நரசிம்மா ரெட்டியார், T.R.கோதண்டராம முதலியார், T. சுந்தரராவ் நாயுடு, S. G. ரங்கராமானுஜம், முத்துலிங்கா ரெட்டியார், C. D. நாயகம், மாயவரம், சம்பந்தம் N. ஜீவரத்தினம், நடராசன், K. K. நீலமேகம், A. பொன்னம்பலனார், V. சின்னதம்பி, கடலூர் பீட்டர் ஆகியவர்கள்.

நிர்வாக உறுப்பினரல்லாத தோழர்கள், கிரியப்பா, திருமலைசாமி, H. ஜகந்நாதம். S. M. சொக்கலிங்க முதலியார், பண்டித திருஞானசம்பந்தம் அங்கமுத்து ஆகியமற்றும் பல தோழர்கள் கூட்ட நடவடிக்கைகளைக் கவனிக்கவந்தனர்.

சர். பாத்ரோ அவர்கள் தலைமைவகித்துப் பேசுகையில், கடந்த சில ஆண்டுகளாக நமது கட்சி போதியவேலைகளைச் செய்யவில்லை யென்றும், கட்சியை சீர்திருத்தி மீண்டும் பிரசாரம்செய்து மக்களிடையே செல்வாக்குப் பெறவேண்டுமென்றும், தலைவர் பதவிக்கு யார் வேண்டும் என்பதுபற்றி எனக்கு முக்கியமில்லை யென்றும், யார் வந்தாலும் சரி, கட்சியைப் பலப்படுத்த வேண்டுமென்பதே எனது நோக்கமென்றும் சொல்லி அவரவர்களின் அபிப்பிராயத்தை தெரிவிக்கவேண்டு மென்றும் சொல்லி உட்கார்ந்தார்.

தோழர்.C. L.நரசிம்மரெட்டியார், P. பாலசுப்ரமண்யம், M. தாமோதரம்நாயுடு ஆகியவர்கள், கட்சி சரியான முறையில் இல்லாதது பெருங்குறை யென்றும், காரியதரிசி நியமிக்கப்படவில்லை யென்றும், திருவாரூர் மாநாட்டுக்குப்பின் மகாநாடே கூடாதது பெரிய தவறென்றும், கட்சித் தலைவர் இக்காரியங்களில் அக்கறை செலுத்தாதிருப்பதால், அதற்காவன செய்யவேண்டியது இக்கூட்டத்தின் முக்கியமென்றும் பேசினார்கள்.

தோழர் K. K. நீலமேகம்-"தலைவரவர்களே! இக்கமிட்டிக் கூட்டம் கூட்டுவது ஒழுங்கானதா, சேலத்தில்கூடிய கமிட்டிக் கூட்டத்திற்கும்,இதற்கும்என்னதொடர்பு உண்டு, இன்றும் சொல்வேனேயானால் கூட்டத்திற்குத் தலைமைவகித்திருக்கும், தாங்கள் நிர்வாகஉறுப்பினரா? இவ்வித ஒழுங்கற்ற முறையில் நடத்தப்படும் இக்கூட்டத்தின் நடவடிக்கைகளை என்னைப் போன்ற நிர்வாக உறுப்பினர்கள் கண்டிக்காமலிருக்கமுடியாது. வேண்டுமென்றே ஒருசிலர் இவ்விதமாக தலைவர் அனுமதியின்றியும், தாந்தோன்றித்தனமாகவும் நிர்வாகக் கமிட்டி என்ற முறையில் கூட்டத்தை கூட்டி மனதில் எதையோ வைத்துக்கொண்டு கட்சியில் பிளவுஉண்டு பண்ணுவது ஒழுங்காகுமா? எதற்கும் ஒரு அளவு உண்டு, நிர்வாகக் கமிட்டியைத் தலைவர் அனுமதியின்றிக் கூட்டம் என்று அழைப்பில் காணப்பட்டவர்களுக்கு என்ன அதிகாரம் உண்டு. இது வேண்டுமென்றே கட்சியில் கலகமுண்டுபண்ணுவதாகும் ஆகவே இவைகளை யெல்லாம் தீர்த்து மேற்கொண்டு நடவடிக்கைகளைநடத்த வேண்டுகிறேன் என்று பேசிவரும்போது இடையிடையே தோழர்கள். தாமோதரம் நாயுடுவும், P. பாலசுப்ரமணியமும் குறுக்கிட்டுத் தடுத்துவந்தார்கள்.

உடனே தோழர்கள். மாயவரம், சம்பந்தம், N. ஜீவரத்தினம், நடராசன், V. சின்னதம்பி, கடலூர் பீட்டர் ஆகியவர்கள் கூட்டத்தலைவர் இருக்கையில், இவர் இடை மறுத்துப்பேசுவது ஒழுங்காகாதென்றும், இவ்வித கூச்சலினால் தங்கள் காரியத்தைச் சாதித்து விடலாமென்று கருதுவது பைத்தியக்காரத்தனமென்றும் சொல்லவே, சர். பாத்ரோ எழுந்திருந்து இனி அவ்விதம் நடைபெறாதவாறு செய்வதாக உறுதி கூறினார்.

தோழர். பொன்னம்பலனார்-"பெரியார் அவர்களிடம் எனக்கிருக்கும் மதிப்பும் அன்பும் எத்தகையது என்பதை நீங்கள் அறிவீர்கள். யானும் சொல்லுகிறேன், கட்சிப் பிரசாரமும் மற்ற நடவடிக்கைகளும் தீவிரமாக செய்யப்படவில்லையென்று. அதையாரும் மறுக்கமுடியாது. ஆனால் அதை எவ்விதம் சரி செய்ய வேண்டுமோ அதை விடுத்து சேலத்தில் ஒரு கூட்டம் சமீபத்தில் கூடியிருக்கும்போது அதற்கு வராமல் சென்னையில் ஒன்றை யாரோ சிலர் கூடிக்கொண்டு நிர்வாகக் கூட்டம்என்று பேர்சொல்லுவது சிறிதும் ஒழுங்காகாது என்பதோடு நாம் எதிர்பார்க்கும் நன்மையும் அடைய முடியாது. அத்துடன் பெரியார் ஜஸ்டிஸ் கட்சிக்குத் தலைவராகயிருப்பது சில பிற்போக்காளர்களுக்குப் பிடிக்கவில்லை யென்பதுடன், பெரியார் அவர்களுக்கும் ஜஸ்டிஸ்கட்சித்தலைவராகயிருக்கப் பிடிக்கவில்லை யென்பதை வெளிப்படையாகவே சொல்லி வருவதால், எல்லாவற்றையும் சேலத்தில் நடத்தப்போகும் மாநாட்டில் முடிவுசெய்வதுதான் சிறந்த வழியாகும்" என்று சொன்னார்.

பிறகு தோழர் C.D. நாயகம்-எழுந்து "தலைவரவர்களே, யான் ஒரு ஆட்சேபனையை தெரிவிக்கவிரும்புகிறேன். இக்கூட்டத்தின் அழைப்பில், சேலத்தில் நடைபெற்ற கமிட்டிக்கூட்டம் கோரமின்மையால் செல்லுபடியாகாததென்றும் எனவே இக்கூட்டம்கூட்டப்படுகிறதென்றும் முக்கியவிஷயமாக காணப்படுகிறது. இதோபாருங்கள் இப்புத்தகத்தை, கமிட்டிக்கு கோரம் எவ்வளவுவேண்டுமென்று. (தன்னிடமிருந்த கட்சியின் சட்டப்புத்தகத்தை எடுத்துக் காண்பித்தார்) 15பேர் இருந்தால் கோரம் என்பது இப்போதாவது யாவர்களும் அறிவார்களென்று நினைக்கிறேன். எனவே சேலத்தில் நடைபெற்ற கமிட்டிக்கூட்டம் கோரமில்லை என்று சொல்லுவது எவ்வாறுபொருத்தமாகும்.

இந்நிலையில் தோழர் பி. பாலசுப்பிரமணியம் குறுக்கிட்டு ஏதோ சொல்ல முயன்றார். கூட்டத்தினர் ஆட்சேபித்ததால் தலைவர்பேச அனுமதி கொடுக்க மறுத்துவிடவே உட்கார்ந்து விட்டார்.

மேலும், சி. டி. நாயகம் பேசுகையில், சேலக்கமிட்டிக் கூட்டத்தை தவறென்று சொல்லவோ அல்லது தலைவர் அனுமதியின்றி சிலர்சேர்ந்து நிர்வாகக்கமிட்டி கூட்டம் நடத்தவோ அதிகாரமுண்டா என்பதை விளக்கவேண்டுமென்று தெரிவித்தார். தலைவர் சர். பாத்ரோ அவர்கள் இதைக்காதில் போட்டுக்கொள்ளாதவர்போல், இதுபற்றிக் கவனம்செலுத்தாமலேயே தீர்மானங்களை நிறைவேற்ற வேணுமென்றும் சொல்லிஉட்கார்ந்தார்.

தோழர் நடராசன், "தலைவர் அவர்களே! தோழர் சி. டி. நாயகம் அவர்கள் கேட்டகேள்விக்கும் ஆட்சேபனைக்கும் பதில் சொல்லாமல் தீர்மானங்களை நிறைவேற்றுவது ஒழுங்காகுமா?

(8-ம் பக்கம் பார்க்க)

## நிர்வாகக் கமிட்டிகூட்டம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தோழர்கள் K. C. சுப்ரமண்யசெட்டியாரும், தாமோதர நாயுடுவும் எழுந்து அது பிறகு பார்த்துக்கொள்ளலாம், தீர்மானம் நிறைவேறட்டும் என்று சொல்லிக் குறுக்கிட்டார்கள்.

மாயவரம் சம்பந்தம்—அது முடியாத காரியம் அதோடுயானும் ஒரு ஆட்சேபனையை தெரிவிக்கிறேன். கமிட்டிக்கூட்டம் என்றால் உறுப்பினர்களுக்குச் சரியான நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும். கூட உரிமை உள்ளவர்கள் கையெழுத்துவேண்டும், அப்படி இல்லாமல் இதை எப்படி கூட்டம் என்று சொல்ல முடியும் என்றார்.

N. ஜீவரத்தினம்—எனக்கும் மற்றும் சிலருக்கும் அதுகூடவரவில்லை காரணம் என்னவோ, தலைவர் இதையெல்லாம் சாதாரணமாகக் கருதக்கூடாது. ஏதோ மூலையில் ரகசியமாய் 4பேர்கூடி தங்கள் இஷ்டம்போல் நடந்துகொள்வது சரியல்ல என்றார்.

பாரிஸ்ட்டர் ரங்க ராமாநுஜம்—யான் இதுவரை பேசாமலே இருந்துவந்தேன். கூட்டத்தின் போக்கைக் கவனித்தால் வருந்தக்கூடியதாக இருக்கிறது. நாம் அனைவரும் ஒரே நோக்கத்திற்காகப் பாடுபட்டுவருபவர்கள். நமக்குள் பிரிவுகள் காணப்படுவது சரியல்ல, சேலத்தில்நடைபெற்ற கமிட்டிக்கூட்டத்தின் நடவடிக்கைகளை நாம் எப்படிக்குற்றம் சொல்ல முடியும்? சேலத்தில் மாநாடு நன்றாகநடக்கிறது. நாம் நமக்குவேண்டியதை அங்கு செய்துகொள்ளலாம். பிறகு சென்னையிலும் நடத்தலாம். இவ்விதமனப்பான்மை இல்லாவிடில் நாம் வெற்றியடைய முடியுமா? எனவே எனக்குத் தெரிந்தவரையில் இக்கூட்டத்தைக் கமிட்டிக் கூட்டம் என்றிருப்பதைமாற்றி நிர்வாகஉறுப்பினர் சிலர்கூட்டிய கூட்டம் என்று மாற்றிவிட்டால் இங்கு காணப்படும் வித்தியாசங்கள் தீர்ந்து இனிமேற்கொண்டு காரியங்களை நடத்தவும், அல்லது சேலத்தில் நடைபெறும் மாநாட்டில் சரியான முறையில் கட்சியின் வேலைத்திட்டங்களை வகுத்து நாம் ஆவனசெய்யலாம், ஆகவே கூட்டத்தலைவர் இதை ஏற்றுக்கொள்வாரென நம்புகிறேன்.” என்றார்.

தோழர் P. பாலசுப்ரமண்யம் இதை மறுக்க எழுந்தார். தலைவர் அவ்விதம் குறுக்கிடுவது ஒழுங்கற்றதென்றுசொல்லி நிர்வாகக்கூட்டம் என்றிருந்தத்தை சாதாரணக்கூட்டம் என்று திருத்திக்கொள்வதாகச் சொன்னார்.

ஆனால் உடனே திருத்தவேண்டும் என்று பலர் வற்புறுத்தவே, பாரிஸ்டர் ரங்கராமாநுஜம் அவர்கள் கூட்டநடவடிக்கைகளில் சாதாரணக்கூட்டம், என்று திருத்தி எழுதினார்.

பின்னர், ஐகோர்ட் ஜட்ஜு பதவிகள் பார்ப்பனரல்லாதார்க்கு கொடுக்கப்படவேண்டுமென்றும். காங்கிரஸ் காரர்கள் இனியாவது தங்கள் தவறுகளைஉணர்ந்து நாட்டின் நன்மைக்கான காரியங்களைச் செய்ய முன்வரவேண்டுமாறு எச்சரிக்கை செய்வதாகவும், தென்ஆப்ரிக்காவிலுள்ள நிறத்துவேஷத்தைக்கண்டிப்பது போலவே இந்தியாவிலிருக்கும் வர்ணாஸ்ரம பாகுபாடுகளைக் கண்டிப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

தோழர், மாயவரம், சம்பந்தம், இக்கூட்டம் சேலத்தில் நடைபெற்ற கமிட்டியின் நடவடிக்கைகளை ஆதரிக்கிறதென ஓர் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். தோழர்கள் K. K. நீலமேகம், சின்னதம்பி, C. D. நாயகம், N. V. நடராசன் N. ஜீவரத்தினம், கடலூர்பீட்டர், ஆகியவர்கள் அதை வற்புறுத்தினர்.

கூட்டத் தலைவர் எழுந்திருந்து, கமிட்டிக்கூட்டம் என்பதை சாதாரணக்கூட்டம் என்று மாற்றப்பட்டதே அதுசேலத்தின் கமிட்டிக்கூட்டத்தை ஆதரிப்பதாகத்தான் ஆகிவிட்டதே, என்று சொல்லி “தயவுசெய்து நீங்கள் இதை வற்புறுத்த வேண்டிய அவசியமே இல்லைஎன்று தெரிவிக்கவே, தோழர்கள் பாரிஸ்டர் ரங்கராமாநுஜம் அவர்களும் வேண்டிய சமாதானம் தெரிவித்தபின்னர், தோழர் சம்பந்தம் அவர்களின் தீர்மானத்தை நிறுத்தப்பட்டது. சேலம் கூட்டம் சரியான கூட்டம் என்று தலைவர் சொன்னவுடன் தோழர் பி. பாலசுப்பிரமணியம் எழுந்திருந்து கூட்டத்தைவிட்டு வெளியேப் போய்விட்டார், தோழர் கிரியப்பா, பேசுகையில் பெரியார் அவர்களுடன் கலந்து இனி ஆவனசெய்து நமது கட்சியைப் பலப்படுத்துங்கள், அதைவிட்டு இனி இப்படிச்செய்யாதீர்கள் என்று சொன்னார்.

தலைவர் சர். பாத்ரோ, இக்கூட்டத்தில் யாதொரு அசம்பாவிதமும் நடக்காமல் சமாதானமுறையில் முடிவுற்றது குறிப்பிடத்தக்கதென்றும், இங்கு நடைபெற்ற விவாதங்களை அனைவரும் மறந்து நமது கட்சிக்காக வேலைசெய்யுங்கள் என்றும் சொல்லி முடித்தார்.

பாரிஸ்டர் ரங்கராமாநுஜம் வணக்கம் கூற கூட்டம் பகல் 2-மணிக்கு முடிவுற்றது.

---

குறிப்பு:—முன்பொருமுறை தோழர் பாலசுப்ரமண்யமும் மற்ற ஒரு சிலரும், கோகலே மண்டபத்தில் அறையில்கூடிய கூட்டத்தில் கண்ட தோல்வியிலிருந்து கட்சியின் ஆக்கவேலையை ஒழுங்காகச் செய்ய முயன்றிருக்கவேண்டும். அதை விடுத்து மீண்டும் சன்தியேட்டரில் நடத்திய “நிர்வாகக் கமிட்டி” நாடகத்திற்கு வசூலாகாவிட்டாலும் பரவாயில்லை, தலைத்தப்பியது தம்பிரான் புண்ணியமாக ஆகிவிட்டது. எனவே இனியாகிலும் கட்சியின் நன்மையை முன்னிட்டுநேரிய முறையில் உழைப்பாரா?

படியுங்கள்! படியுங்கள்!!

திவான்பகதூர் திரு. M. C. ராஜா அவர்கள் காங்கிரசைத் தாக்கி
உற்சாகத்துடன் பேசினதையும், காங்கிரசின் ஊழல்
களையும், தாழ்த்தப்பட்டோர்களுக்கு காங்கி
ரஸ் மந்திரிசபை புரிந்தஅபூர்வ (!)
தொண்டுகளைப்பற்றியும்
விவரிக்கும்

ஆரிய ஆட்சி.

விலை அணா-6.

கிடைக்குமிடம்:—
லிபரேடர் வெளியீட்டுக் கழகம்,
நெ-2, மவுண்ட்ரோடு, சென்னை.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at “Dravida Nadu” Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.